# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2015 - 2016

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 6

சுட்டெண்:............................................................ நேரம்: 150 மணித்துளிகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. உயிர் எழுத்துகள்

அ) 12 ஆ) 18 இ) 30 ஈ) 216

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. மக்களின் புறத்தோற்ற வளர்ச்சியினை ________________ என்பர்.

அ) பண்பாடு ஆ) நாகரிகம்

இ) பழக்கவழக்கம் ஈ) ஒழுக்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. அட்டாலும் ________________ சுவையில் குன்றாது.

அ) தயிர் ஆ) பால் இ) மோர் ஈ) தண்ணீர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. வள்ளல் என்ற சொல்லின் பொருள்

அ) உழவன் ஆ) கொடையாளி

இ) கஞ்சன் ஈ) புலவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. **அ, இ, உ, எ, ஒ** என்பன ________________ எழுத்துகள்.

அ) நெடில் ஆ) குறில் இ) மெய் ஈ) உயிர்மெய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. பெலிவாவி என்ற குளத்தின் இன்றைய பெயர்

அ) செட்டிகுளம் ஆ) மாங்குளம்

இ) இரணைமடுக்குளம் ஈ) வவுனிக்குளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. ஒழுக்கம் இல்லாதவர்களைக் குமுகாயம் வெறுத்து

அ) ஒதுக்கும் ஆ) ஏற்கும் இ) புகழும் ஈ) விரும்பும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பாவலன் என்பது

அ) அஃறிணை ஆ) பெண்பால் இ) உயர்திணை ஈ) பலர்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. காகிதம் செய்யப்படுவது

அ) இலையில் ஆ) வைக்கோலில்

இ) தாளில் ஈ) மண்ணில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. மணிபல்லவம் இன்று ______________ என அழைக்கப்படுகின்றது.

அ) பூநகரி ஆ) கல்யாணி இ) நயினாதீவு ஈ) கொழும்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. கொக்குகளின் சொல்லைக் கேட்காமல் கீழே வீழ்ந்து இறந்து போனது

அ) இறால் ஆ) மீன் இ) ஆமை ஈ) நண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. நான் + ஐ என்பதைச் சேர்த்தால்

அ) உன்னை ஆ) நானை இ) என்னை ஈ) தன்னை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. இயற்கைத்துறைமுகம் அமைந்துள்ள இடம்

அ) வவுனியா ஆ) மன்னார்

இ) மட்டக்களப்பு ஈ) திருகோணமலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. **படித்தல்** என்பது

அ) தொழிற்பெயர் ஆ) சினைப்பெயர்

இ) காலப்பெயர் ஈ) இடப்பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. காலையில் தாமரை மலர்ந்தது. இதில் தாமரை என்பது

அ) பயனிலை ஆ) செயப்படுபொருள்

இ) எழுவாய் ஈ) அடைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. இலங்கைத்தீவு முழுவதையும் ஆங்கிலேயர் கைப்பற்றிய ஆண்டு

அ) 1915 ஆ) 1933 இ) 1815 ஈ) 1833

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. முன்னிலை இடத்தைக் குறிக்கும் சொல்

அ) வந்தோம் ஆ) பாடுகின்றோம்

இ) வரைகின்றாய் ஈ) எழுதுகின்றனர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. **வானம்** என்பதைக் குறிக்கும் வேறொரு சொல்

அ) கதிரவன் ஆ) முகில் இ) மேகம் ஈ) விண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. "ஏலேலோ ஐலசா...." எனத் தொடங்கும் பாடல்

அ) தாலாட்டுப்பாடல் ஆ) ஏர்ப்பாடல்

இ) அறுவடைப்பாடல் ஈ) மீன்பிடித்தொழிற்பாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. பெயர்ச்சொற்கள்

அ) ஐந்துவகை ஆ) ஏழுவகை

இ) ஆறுவகை ஈ) நான்குவகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. நாகதீபத்தில் ஆட்சியை அமைத்திருந்தவர்கள்

அ) இயக்கர் ஆ) நாகர்

இ) சிங்களவர் ஈ) ஒல்லாந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. **ங், ஞ், ண், ந், ம், ன்** என்பன

அ) இடையினம் ஆ) மெல்லினம்

இ) வல்லினம் ஈ) உயிரினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. திருக்குறள் :- சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்

பெற்றத்தாற் ____________ பயன்

அ) சுற்ற ஆ) பெற்ற இ) செற்ற ஈ) மற்ற

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. கறுப்பின மக்களுக்காகப் போராடியவர்

அ) யசீர்அரபாத் ஆ) நெல்சன்மண்டேலா

இ) பகவத்சிங் ஈ) கடாபி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பின்வருவனவற்றுள் இறந்தகாலத்திற்கு எடுத்துக்காட்டு

அ) பாய்கின்றது ஆ) செல்வான்

இ) வருகின்றது ஈ) மேய்ந்தது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. கின்று, கிறு என்பன ________________ கால இடைநிலைகள்

அ) இறந்த ஆ) எதிர் இ) நிகழ் ஈ) வரும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. வேடர்களின் சத்துணவுகளில் ஒன்று

அ) சோறு ஆ) மீன் இ) தேன் ஈ) காய்கறி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. புலவருக்காகத் தன் தலையையே கொடுக்க முன்வந்த மன்னன்

அ) இரும்பொறை ஆ) செங்குட்டுவன்

இ) குமணன் ஈ) எல்லாளன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. இலங்கைக்கு இறுதியாக வந்த ஐரோப்பியர்

அ) ஒல்லாந்தர் ஆ) ஆங்கிலேயர்

இ) போர்த்துக்கேயர் ஈ) ஆரியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. ஒருசெயல் நடக்கப்போவதைக் குறிக்கும் காலம்

அ) இறந்தகாலம் ஆ) நிகழ்காலம்

இ) முடிந்தகாலம் ஈ) எதிர்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

குயில் ஒரு பறவை. இது பல நிறங்களில் காணப்படும். காகம் போன்று கன்னங்கரிய நிறத்தில் சிவப்புக் கண்களுடன் ஒருவகைக் குயிலினம் காணப்படும். சாம்பல் நிறத்தில் வெள்ளை நிறப்புள்ளிகளை உடையதாய் ஒருவகைக் குயிலினம் காணப்படும். சாம்பல்நிறக் குயில்களைப் பொறிக்குயில்கள் என அழைப்பர். குயில் இனிமையாகக் கூவும். குயிலின் கூவல் இனிய பாடல் போன்று ஒலிக்கும். அதனால்தான் குயில் பாடும் மயில் ஆடும் எனக்கூறுவர். இத்தகைய இனிய குரலையுடைய குயிலுக்குக் கூடுகட்டத் தெரியாது. அதனால் குயில் காகத்தின் கூட்டில் முட்டை இடும். குயிலின் குஞ்சுகள் காகத்தின் கூட்டில்தான் வளரும். குயிலின் குஞ்சுகள் வளர்ந்து கூகூ என்று கத்தும் காகம் உடனே அவற்றைக் கொத்திக் கலைத்துவிடும். அவை வெளியே பறந்து போய்விடும். கத்துங் குயிலோசை சற்றே வந்து காதில் விழவேண்டும் எனப் பாரதியார் குயிலின் இசையைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

1. சாம்பல்நிறக் குயில்களை எவ்வாறு அழைப்பர்?

 ______________________________________________

2. குயிலின் கூவல் எதைப் போன்று ஒலிக்கும்?

 ______________________________________________

3. கூடுகட்டத் தெரியாத பறவை எது?

 ______________________________________________

4. குயில் எங்கே முட்டை இடும்?

 ______________________________________________

5. "கத்துங் குயிலோசை சற்றே வந்து காதில் விழவேண்டும்"
 எனப் பாடியவர் யார்?

 ______________________________________________

புள்ளிகள் 10

### 3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.

1. மாமன்னன் எல்லாளன் எதனைத் தலைநகராகக்கொண்டு இலங்கையை ஆட்சி செய்தான் ?

______________________________

______________________________

2. வெந்நீர்க் கிணறுகள் (ஊற்றுக்கள்) இலங்கையில் எங்கே காணப்படுகின்றன?

______________________________

______________________________

3. புளோரன்சுநைட்டிங்கேல் என்பவருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பட்டம் என்ன?

______________________________

______________________________

4. போர்த்துக்கேயரின் வருகையின்போது தமிழீழப் பகுதியில் நிலவிய அரசு எது?

______________________________

______________________________

5. நாட்டுப்புறப் பாடல்கள் யாரால் பாடப்படும் ?

______________________________

______________________________

6. மடுமாதா கோவில் எங்கே அமைந்துள்ளது?

______________________________

______________________________

7. வடதமிழீழத்தில் கடற்குளிப்புக்காக மக்கள் நாடிவரும் இடம் எது?

______________________________

______________________________

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொல்லைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

## கல்வி

| | | | | |
|---|---|---|---|---|
| பண்பாட்டை | கடமைகளை | படித்து | வெற்றிகளை | கூடி |

நாளும் கல்வி கற்றிடுவோம்
நன்றாய்ப் ______________ உயர்ந்திடுவோம்
பள்ளி சென்று படித்திடுவோம்
பல ______________ க் குவித்திடுவோம்
ஆசிரியர் சொற் கேட்டிடுவோம்
அன்பாய்க் ______________ மகிழ்ந்திடுவோம்
எமது வரலாற்றைக் கற்றிடுவோம்
எமது ______________ மதித்திடுவோம்
நல்லவராய் நாம் வாழ்ந்திடுவோம்
நமது ______________ ச் செய்திடுவோம்

புள்ளிகள் 10

**5) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

நீர் இல்லாவிட்டால் எம்மால் உயிர்வாழ முடியாது. மழையின் மூலம் எங்களுக்கு நீர் கிடைக்கின்றது. ஆறுகள் குளங்களில் இருந்தும் நீரைப் பெற்றுக்கொள்ளலாம். நீரை நாங்கள் வீணாக்கக்கூடாது. கடல்நீரை எங்களால் குடிக்க முடியாது.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 05

**6) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வரும் ஒருமைச் சொல்லியங்களைப் பன்மைச் சொல்லியங்களாக மாற்றி எழுதுக.

அ. ஆடு புல் மேய்ந்தது.

________________________________________

ஆ. அவன் கிளித்தட்டு விளையாடினான்.

________________________________________

2. நிரற்கூட்டை நிறைவு செய்க.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| | படிக்கின்றாள் | |
| பறந்தது | | |
| | | உண்பர் |

3. எடுத்துக்காட்டுகள் தருக.

சினைப்பெயர் :- ______________________________

இடப்பெயர் :- ______________________________

பொருட்பெயர் :- ______________________________

4. பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

வள்ளல் :- ______________________________

உறவினர் :- ______________________________

5. அ. இலக்கணவகையால் பால் எத்தனை வகைப்படும்?

________________________________________

ஆ. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

ஒன்றன்பால் :- ______________________________

ஆண்பால் :- ______________________________

புள்ளிகள் 15

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ எல்லாளன்.

★ தமிழீழ நாடும் விடுதலைப் போராட்டமும்.

★ என் பெற்றோர்.

புள்ளிகள் 20

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________